**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 198/2023**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW9<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Rajini |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 21st day of April, 2025.

**(A1, present, A2 absent. Petition filed and allowed)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நான் தற்போது மீஞ்சூர் அருகிலுள்ள புதுப்பேட்டில் வசித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. விநாயகர் கோவில் அருகில் ரவுண்ட்ஸ் வரும்பொழுது ஒரு வெள்ளை காகிதத்தில் கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக

கையொப்பம் செய்தேன் என்று எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் நாகராஜ் (எ) பாம்பு நாகராஜின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் கையொப்பம் வாங்கும்போது அதில் எதுவும் எழுதப்படவில்லை. நாகராஜ் (எ) பாம்பு நாகராஜின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் நாகராஜ் (எ) பாம்பு நாகராஜினிடமிருந்து 3 கத்திகள் மற்றும் வெள்ளை நிற சட்டையை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் கையொப்பம் வாங்கும்போது அதில் எதுவும் எழுதப்படவில்லை. நாகராஜ் (எ) பாம்பு நாகராஜனிடமிருந்து 3 கத்திகள் மற்றும் வெள்ளை நிற சட்டையை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் போலீசார் விசாணையின் போது 17/05/2022 அன்று சுமார் மாலை 3.30 மணியளவில் நானும், என் நண்பர் கோபி என்பவரும் சொந்த வேலை காரணமாக மீஞ்சூர் கவுண்டர் பாளையம் அரசு பள்ளி பின்புறம் சென்றதாகவும், இந்த வழக்கு சம்பந்தமாக மீஞ்சூர் காவல் உதவி ஆணையாளர் இந்த வழக்கின் எதிரிகளான நாகராஜ் (எ) பாம்பு நாகராஜ், ராஜேஷ் (எ) ஆகாஷ், யுவராஜ் (எ) கிளி, மது, சூர்யா, கோபாலகிருஷ்ணன், ராஜ்குமார், யுவராஜ், பாலா ஆகிய 8 எதிரிகளை என் முன்னிலையில் போலீசார் கைது செய்ததாகவும், அதே நாள் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நாங்களும் என்னுடன் எதிரிகள் சுந்தரபாண்டியன் (எ) சுந்தர், பத்மநாபன், அரவிந்குமார், பாலாஜி, சௌந்தர் ஆகியோர்களை சேர்ந்து கடந்த 15/05/2022 அன்று

சுமார் 8.30 மணியளவில் கொண்டக்கரை பரூக்கா கேஸ் கம்பெனி அருகில் ஊராட்சி மன்ற தலைவர் மனோகரனை லாரியால் காரில் மோதி கத்தி வெட்டி கொலை செய்ததாகவும், எதிரிகள் தாமாக முன்வந்து ஒப்புக்கொண்டு நாகராஜ் (எ) பாம்பு நாகராஜ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அடிப்படையில் போலீசார் எதிரிகள் சம்பவத்திற்கு பயன்படுத்திய வழக்கு சொத்தான கவுண்டபாளையம் அரசு பள்ளிக்கு பின்னார் செடிகளில் மறைத்து வைத்திருந்த இரத்த கறை படிந்த கத்தி-1, இரத்த கறை படிந்த வெள்ளை நிற அரைக்கை சட்டை-1, உடனிருந்த எதிரி யுவராஜ் (எ) கிளி மற்றும் யுவராஜ் (எ) பாலா பயன்படுத்திய இரத்த கறை படிந்த 2 கத்திகளையும் என் முன்னிலையில் ஆஜர் செய்ததாகவும், எதிரி நாகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் நானும் என் ஊரைச்சேர்ந்த கோபி என்பவரும் கையொப்பம் செய்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்யபட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.